மலர் - 9 MARCH — 1996 இதழ் - 3

# புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

## உங்கள் கவனத்திற்கு

"அற்புத அடையாளங் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வரம்" மற்றும் "எனக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா?" என்ற தலைப்புகளில் 38 பக்கங்கள் கொண்ட ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. ஊழியர்கள், வேத மாணவர்கள், விசுவாசிகள் ஆகிய அனைவருக்கும் மிகுந்த பயனுள்ளதாய் இருக்கும்.

ஆப்செட் (off-set) முறையில் அச்சிடப்பட்டு நவீன முறையில் பைண்டிங் மற்றும் லேமினேசன் (Lamination) செய்யப்பட்டுள்ளது. புத்தகம் முற்றிலும் இலவசம்.

தபால் செலவுக்கு மட்டும் நீங்கள் பணம் அனுப்பிக் கொடுத்தால் புத்தகம் உங்களுக்கு உடனே அனுப்பிக் கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 10 | புத்தகத்திற்கு | ரூ. 9.00 |
| 25 | புத்தகத்திற்கு | ரூ. 21.25 |
| 50 | புத்தகத்திற்கு | ரூ. 40.00 |

M.O. செய்ய வேண்டிய முகவரி
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
**C/o. கிறிஸ்துவின் சபை**
தாராபுரம் ரோடு
காங்கயம் – 638 701.

## ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. மந்திரியின் மனமாற்றம் — 1
2. தேவன் இன்று மனிதனுடன் எவ்வாறு பேசுகிறார்? — 10
3. பெண்கள் பகுதி — 16
4. ஜெபம் — 22
5. நீ ஏன் சந்தேகப்பட்டாய்? — 27
6. யெகோவா சாட்சிகள் (12) — 31

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 MARCH - 1996 ISSUE-4


## ஆசிரியவுரை

# "மந்திரியின் மனமாற்றம்"

இம்மண்ணுலக மாந்தர்களை பாவத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்டெடுக்க வானத்திலிருந்து இறங்கிவந்த இயேசு பெருமான் சிலுவையின் மீது முழு வெற்றி கண்டு, இவ்வுலகை விட்டு கடந்து போகுமுன், தம்முடைய சீடர்களுக்கு ஒரு மாபெரும் கட்டளையை இட்டுச் சென்றார். "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதி களையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதே சம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்க ளிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" (மத். 28:19, 20)

இம்மாபெரும் கட்டளையை அவருடைய சீடர்களாகிய நாம் நிறைவேற்ற, நமக்கு மிகச் சிறந்த ஆதாரமாக இருப்பது அப்போஸ்தல ருடைய நடபடிகள் புத்தகமே. ஏனெனில் புதிய ஏற்பாட்டில் 27 புத்த கங்கள் இடம் பெற்றிருந்தாலும், "ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவது எப்படி? என்பதை விளக்கும் ஒரே நூல் இதுதான். சுவிசேஷப் புத்த கங்கள் மற்றும் வெளிப்படுத்தல் தவிர உள்ள மீதி 21 நூல்களும்"ஒருவன் கிறிஸ்தவனாக வாழ்வதெப்படி?" என்பதையே பிரதானமாகக் கூறுகிறது.

சரி, இவ்வரிய நூலின் 8-ம் அதிகாரத்தின் பிற்பகுதி (வ. 26–40) "ஒரு மந்திரியின் மனமாற்றத்தைக் குறித்து விவரித்துச் சொல்கிறது."

இங்கே இடம் பெற்றுள்ளன சம்பவத்தை சற்று விபரமாகப் படித்தால் நமக்குப் பிரயோஜனமாக இருக்குமென்று நம்புகிறேன்.

நாம் பார்க்கப் போகும் மந்திரியின் பெயர் இங்கே இடம் பெறவில்லை. ஆனால், அவன் எத்தியோப்பியா தேசத்தின் மந்திரியாக, அதுவும் நிதிமந்திரியாக இருந்துள்ளான். வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள இந்த எத்தியோப்பியா, இன்றைய உலக வரைபடத்தில் உள்ள எத்தியோப்பியா அல்ல. இன்றுள்ள எத்தியோப்பியா, நமது இந்திய தேசத்தைக் காட்டிலும், பொருளாதாரத்தில் பின் தங்கி பஞ்சத்தாலே வாடிக் கொண்டிருக்கும் ஒரு ஏழை நாடு. ஆனால், அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள நாடு, அன்றிருந்த உலகத்தில் குறிப்பிடத்தக்க நாடாகவும், செல்வச் செழிப் போடும் இருந்ததாக சரித்திரம் கூறுகிறது. அத்தேசத்து ராணியின் பெயர் "கந்தாகே". "அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனாயிருந்தான்" என்று வேதம் இவனைப் பற்றிச் சொல்கிறது. (8:27) ஒரு அரசாங்கத்தில் மந்திரிகள் பலர் இருந்தாலும், நிதி மந்திரிதான் மிக முக்கிய புள்ளி. எந்த ஒரு அரசிலும் இரண்டாவது ஸ்தானம் இவர்களுக்கே சொந்தம். அதிபதி ஒரு பெண்ணாக இருந்தபடியால் இவனுடைய அதிகாரமும் செல்வாக்கும் நாம் நினைப்பதைக் காட்டிலும் அதிகமாக இருந்திருக்கும்.

பொதுவாகவே, பணக்காரர்களுக்கும் பக்திக்கும் சம்பந்தமிருக்காது. பணத்தோடு பதவியும் சேர்ந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். ஆனால் இந்த மந்திரியோ கொஞ்சம் வித்தியாசமானவனாக இருந்துள்ளான். பணத்திற்குண்டான செருக்கோ, பதவிக்கான பகட்டோ இவனிடம் துளியும் இல்லாமல் நல்லவனாக அசல் பக்திமானாக இருந்துள்ளான். ஆம், தனது மார்க்க கடமைகளை நிறைவேற்ற, கிட்டத்தட்ட ஆயிரம் மைல்கள் பயணம் மேற்கொண்டான். இவன் பிறப்பால் யூதனாக இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், யூதமார்க்கத்தமைந்தவனாக இருந்தாலும், நீண்ட தூரம் பயணித்து, எருசலேம் பட்டணம் வந்து, தன் காரியங்களை முடித்து இரதத்தில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தான்.

எந்த ஒரு மனிதனுடைய ஆத்துமாவும் கெட்டுப்போவது, தேவனுக்குப் பிரியமானதல்ல (II பேது. 3:9 அப். 17:30). அதிலும், குறிப்பாக அவர்மீது மெய்ப்பக்தி காட்டுகிறவர்களின் ஆத்துமாக்களை அவர் அழிவுக்கு அனுமதிப்பதில்லை. புறஜாதியானாயிருந்த நூற்றுக்கதிபதியின் விஷயத்தில் நாம் இதை இன்னும் திட்டமாக அறியலாம். தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப்

பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கிச் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்த கொர்நெலியுவையும் அவனோடிருந்தவர்களையும் பேதுருவைக் கொண்டு இரட்சித்தார் (அப் 10-ம் அதி.).

இங்கே, ஒரு "பக்தியுள்ள பாவியாக" இருந்த மந்திரியை இரட்சிப்புக்குள் கொண்டு வர ஒரு திட்டம் தீட்டி, அவன் திரும்பி ஊர் செல்லும், வனாந்திர வழியைத் தேர்ந்தெடுத்தார்.

சுவிசேஷப் பிரசங்கியாகிய பிலிப்புவை நாமறிவோம். எருசலேமில் எதிர்ப்பு வலுத்தபோது, சமாரியாவிற்கு ஓடி வந்து கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தவர்தான் இந்த பிலிப்பு (8:4,5) ஊழியத்தை ஜாம் ஜாம் என்று நடத்தி அநேகரை ஞானஸ் நானத்திற்குள் வழி நடத்தினார் (8:12) வெற்றியுள்ள ஒரு ஊழியப் பயணத்தை மேற் கொண்டு எருசலேமுக்குத் திரும்பி வந்த போதுதான், ஒரு வித்தியாசமான அழைப்பு காத்திருந்தது. கர்த்தருடைய தூதனால் காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்திர மார்க்கமாய்ப் போகப் பணிக்கப்பட்டார். அதே சமயம் எத்தியோப்பிய மந்திரியும் வேறு வழியாய் ஊர் திரும்பிக் கொண்டிருந்தான்.

இந்த இரண்டு நெடுஞ்சாலைகளும் ஓரிடத்தில் சந்தித்துள்ளதாகவே தெரிகிறது. ஏனெனில், வெவ்வேறு பாதைகளில் பயணித்த இருவரும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு ஒருசேர வந்து சேர முடிந்தது. தேவன் தான் விரும்பும் திட்டத்தை எவ்வளவு கனகச்சிதமாக நிறைவேற்றுகிறார் பாருங்கள்.

பிலிப்புவிடம் பேசின தூதன் வனாந்திர மார்க்கமாய்ப் போ என்றார். அவன் எழுந்து போனான். (வ. 26) மறுவார்த்தை பேசவில்லை. எதற்காகப் போகச் சொல்லுகிறார் என்று தெரியாது. அவர் திட்டமிட்ட இடம் வந்தபொழுது, "ஆவியானவர்: நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்றார்... பிலிப்பு ஓடிப்போய் சேர்ந்து கொண்டான். (வ. 29, 30) தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஊர் பேர் தெரியாத இடத்திற்குப் போகவும், முன்பின் தெரியாத ஆளிடம் பேசவும் தன்னை ஒப்புக் கொடுத்தான்.

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் நம்முடைய நிலை என்ன? அவருக்காகச் சேவை செய்ய அழைப்புக் கிடைக்கும் போது என்னவெல்லாம் கேட்கிறோம். எப்படியெல்லாம் விசாரிக்கிறோம். வாக்குறுதி வாயிலே தந்தால் போதாது, எழுத்தின் மூலம் இருந்தால் நல்லாயிருக்குமே என்றல்லவா எண்ணுகிறோம். ஆனால்,

வனாந்திர மார்க்கமாய்ப் போகப் பணிக்கப்பட்ட பிலிப்பு எதைப் பற்றியும் வாய் திறக்கவில்லை கவனித்தீர்களா? ஏனெனில், பேர் சொல்லி அழைத்த தேவன் உண்மையுள்ளவர் என்பதை உள்ளப் பூர்வமாக நம்பினான்.

சரி, பிலிப்பு ஓடிப்போய் இரதத்தைச் சேர்ந்தபோது அவன் ஏசாயா தீர்க்கனின் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். "அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பதே" அப்பகுதி.

எத்தியோப்பிய மந்திரிக்கு ஏசாயா தீர்க்கன் யாரைப்பற்றி எழுதியிருக்கிறார் என்று தெரியவில்லை. இயேசுக் கிறிஸ்து யாரென்று அவனுக்கு மருந்துக்குக் கூடத் தெரியாது."இரட்சிப்பின் திட்டம்" என்றால் அது எந்தக் கடையில் கிடைக்கும் என்பதே அவன் நிலை. ஆனாலும், இந்தப் "பக்தியுள்ள பாவி"யின் ஆத்துமா அழிந்துவிடக் கூடாது என்பதற்காக பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவை வழிநடத்தினார்.

அநேகருடைய தவறான உபதேசம் இந்த இடத்தில் வெளிக் கொணரப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். தேவனுக்குப் பயப்படுகிற ஒரு பாவியின் மீது பரிசுத்த ஆவியானவரின் கிரியை நேரிடையாக நடக்கிறது என அநேகர் நம்புகின்றனர். போதிக்கின்றனர். இது சரியென்றால், உண்மையாகவே தேவனுக்கு பயப்படுகின்ற இந்த மந்திரியின் மீது இரங்கி பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்காமல், ஏன் பிலிப்புவின் மூலம் இவனைச் சந்திக்கிறார்? என்ன காரணம்? சிந்திக்கும் திறனை சிறையிலடைத்து விடாமல், கொஞ்சம் நிதானித்துப் பார்ப்போம்.

தான் வாசிக்கிறதின் பொருள் தெரியாத மந்திரி, பிலிப்பை நோக்கி, ". . . தீர்க்கதரிசி யாரைக் குறித்துச் சொல்கிறார்? தம்மைக் குறித்தோ? வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்." (8: 34)

இவன் அன்றைய உலகின் வளம் நிறைந்த ஒரு நாட்டின் வரவு செலவுகளைக் கவனித்து, நிதி நிலையச் சீராக வைத்திருக்கும் பொறுப்பில் இருந்த நிதி மந்திரி. உலகக் கல்வியில் தேறினவர்கள்

தான் இப்பொறுப்பிற்கு வர முடியும். ஆனால் உலகக் கல்வியில் தேறின இந்த மந்திரியால் தேவனுடைய வாக்கியங்களைச் சரியாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் உலகக் கல்வி தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாக இருக்கிறது. (I கொரி. 1:27). இன்றைக்கும் கூட உலகக் கல்வியில் கொஞ்சம் தேறின சமுதாயத்து மக்கள், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற மதையில் தேவனுடைய வார்த்தைகளை அற்பமாகவும், தேவ மனிதர்களை துச்சமாகவும் எண்ணுகின்றனர். அன்பரே! உங்கள் உலக ஞானம் தேவனுடைய வார்த்தைகளைப் புரிந்து கொள்ள உதவாது என்பதை உணர்ந்து உண்மையான தேவ ஊழியர்களின் ஆலோசனைக்குச் செவி கொடுங்கள். வசனத்தில் தெளிவடையுங்கள்.

மந்திரி கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, பிலிப்பு பேசத் தொடங்கி, "இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" என்று வேத வசனம் கூறுகிறது.

இன்றைக்கு இயேசுவைக் குறித்துப் பிரசங்கியுங்கள் என்று மேடைய மைத்துக் கொடுத்தால், வரம் பெற்ற ஊழியர்கள் என தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளும் அநேகர், தேவையானதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பிரசங்கிப்பர். ஆம், இயேசு அன்பானவர் என்பதும், இயேசு இரக்கமுள்ளவர் என்பதும், இயேசு சுகமளிப்பவர் என்பதும், இயேசு கடனைத் தீர்ப்பவர் இயேசு பெண், மாப்பிள்ளை பார்த்துக் கொடுப்பவர், இயேசு லோன் வாங்கித் தருபவர், இயேசு வேலை வாங்கித் தருபவர், இயேசு தேர்வில் தேற உதவுபவர் மந்திரக் கட்டுகளை எடுப்பவர் என்பதெல்லாம் தான் அவரைப் பற்றிச் செய்யும் பிரசங்கம் என்று அநேகர் நினைக்கின்றனர். ஆகவே தான் பிரசங் கத்தின் மூலம் கிடைக்க வேண்டிய பலன் கிடைப்பதில்லை. ஆனால், பிலிப்பு இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்ததன் பலன் எப்படியிருந்தது என்பதைக் கவனியுங்கள்.

கன்னிப் பிறப்பு பற்றி பிலிப்பு, தன் பிரசங்கத்தில் இயேசுவைக் குறித்து ஏதுமறியாத மந்திரிக்கு அவரின் பேசியிருப்பான். ஏனெனில் தேவமைந்தன் பூமிக்கு எப்படி வந்தார் என்பதை விளக்க அது அவசியம். முப்பது வயதில் யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானப் பெற்றதையும், தொடர்ந்து ஊழியம் செய்ததையும் குறித்துப் பேசியி ருப்பான். தீர்க்கத்தரிசனங்களின்படியான அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளைக் குறித்துப் பேசியிருப்பான். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கினது பற்றியும், அந்நாளில் சபையானது வாக்குத்தத்தத்தின்படி பலத்தோடே

ஸ்தாபிக்கப்பட்டது பற்றியும் பேசியிருப்பான். அது மாத்திரமல்ல இயேசுக் கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய, "...நீங்கள் உலக மெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கி யுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற். 16: 15, 16) என்பதையும் தெளிவாகப் பிரசங்கித்திருப்பான். ஆகவே தான், அவர்கள் பிரயாணித்துப் போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தபோது, மந்திரி : "... இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிற தற்குத் தடையென்ன என்றான்" (வ. 36) பிலிப்பு மந்திரிக்கு, "இயேசுவைப் பற்றி பிரசங்கித்தான்" என்று தான் வேதம் கூறுகிறது (8:35). ஆனால் அதில் ஞானஸ்நானம் பூரணமாக அடங்கியிருந்தது என்பதை கவனிப்பது அவசியம்.

இன்று, பெரும்பாலான பிரசங்கிகள், ஞானஸ்நானத்தைக் குறித்து வாயே திறப்பதில்லை. அது அவ்வளவு முக்கியமான விஷயம் அல்ல என எண்ணுகின்றனர். பிரசங்கங்களைக் கேட்கும் பெருமக்களும், ஏன் இவர்கள் ஞானஸ்நானம் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிறார்கள். அதிலென்ன இருக்கிறது. இயேசுவைக் குறித்துப் பேச எவ்வளவோ இருக்கிறது, அவைகளைப் பற்றிப் பிரசங்கித்தால் போதாதா என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். போதிக்கிறவர்களின் எண்ண ஓட்டமும், கேட்கிறவர்களின் மன நிலையும் எவ்வளவு கேடடைந்துள்ள தென்பதையே இது காட்டுகிறது. ஞானஸ்நானத்தின் அவசியத்தைக் குறித்து எடுத்துரைக்காமல் இயேசுவைக் குறித்துச் செய்யும் பிரசங் கங்கள் அரைகுறையானவை. ஆதாயத்திற்காகவும், கடமைக்காகவும் செய்யப்படுபவை, முற்றிலும் அர்த்தமற்றவை என்பதில் இனியும் சந்தேகம் வேண்டாம்.

சரி, தொடர்ந்து வசனத்தைப் படிக்கும்பொழுது, "அதற்குப் பிலிப்பு; நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமார னென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி..." (8:37) அதாவது, "இயேசுவை தேவனுடைய குமாரனென்று நல்ல அறிக்கை பண்ணினான்" இயேசுக் கிறிஸ்துவை அறிக்கை செய்வது மிக அவசியமான ஒன்று. பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் அதில் பிரியப்படுகிறார்கள். நமதாண்டவர் இதைக் குறித்துச் சொல்வதைப் பாருங்கள் "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலி

ருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். . . (மத். 10:32, 33)

அப்போஸ்தலன் பவுல், இளைஞனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது கூட,"விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய் : அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்" என்கிறார் (II தீமுத். 6:12) தீமோத்தேயு ஞானஸ்நானம் பெற்றபொழுது. "இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்" என்ற நல்ல அறிக்கை செய்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

ஞானஸ்நானம் பெறும் முன் அவரை விசுவாசிப்பது (மாற். 16:15, 16) எவ்வளவு முக்கியமோ, விசுவாசித்து மனந்திரும்புவது (அப். 2:38) எவ்வளவு முக்கியமோ அதைப்போல அறிக்கையிடுவதும் அவசியம். இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடாமல் பெறப்படும் ஞானஸ்நானம் சரியானதல்ல வேறு எந்த அறிக்கையும் இதற்கு நிகரானதல்ல. தவறு நடந்திருந்தால், சரியானபடி அறிக்கையிட்டு மீண்டும் ஞானஸ்நானம் பெறுவது மிக மிக அவசியம்.

பிறகு மந்திரி, "இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது. . ." (8:38, 39) இங்கே கொஞ்சம் கவனிப்பது அவசியம்.

ஞானஸ்நானம் என்றால் முழுகித்தான் எடுக்க வேண்டுமென்பதற்கு இதைவிடச் சிறந்த ஆதாரம் தேவையில்லை. நிச்சயமாக மந்திரியின் இரதத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் இருந்திருக்கும். ஏனெனில் நீண்ட பயணத்தின் பெரும்பகுதி வனாந்திரம். ஞானஸ்நானம் என்பது தெளித்தலாகவும் ஊற்றுதலாகவும் இருக்கலாம் என்றால் தேவனால் அனுப்பப்பட்ட பிலிப்பிற்கு அது நிச்சயமாகத் தெரிந்திருக்கும். தெளித்தோ, ஊற்றியோ ஞானஸ்நானம் கொடுக்க இரதத்திலிருந்த தண்ணீரே போதுமே. இரதத்தை விட்டு கீழ் இறங்கக் கூடத் தேவையில்லையே! ஏன், இரதத்தை நிறுத்தக்கூடத் தேவையில்லை தானே!

ஆனால், இவர்கள் இரதத்தை நிறுத்தி, தண்ணீரில் இறங்கினார்கள் — கரையேறினார்கள் எனில் அதன் பொருள் என்ன? முழுகித்தானே ஞானஸ்நானம் எடுத்திருக்க வேண்டும். ஆகவேதான், அப்போஸ்தலர் பவுல், ரோமாபுரியாருக்கு எழுதும் போது. ". . . ஞானஸ் நானத்

தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்'' என்கிறார். (ரோம. 6:4). இவ்வளவு தெளிவாக தேவனுடைய வார்த்தை இருந்தும், ஏன் தெளித்து ஞானஸ்நானம் கொடுக்கிறார்களெனத் தெரிய வில்லை. அதுவும், பாவமே அறியாத பச்சிளம் குழந்தைகளுக்குக் கொடுக்கின்றனரே! அன்பரே நண்பரே ஊற்றுதலும், தெளித்தலும் ஞானஸ்நானமே அல்ல. அல்ல, மீறிச் செயல்படுவோமானால் அது துணிகரமான பாவம். தேவனுடைய காரியத்தில் துணிகரமாகச் செயல் பட்டால் நமக்கு ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபம் வந்து சேரும். ஆகவே தான் தாவீது இவ்விதமாகக் கெஞ்சுகிறார்."துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும்; அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்த மனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். (சங். 19:13)

இறுதியாக, "அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்'' (8:39) என்றுள்ளது. சந்தோஷத்தோடே திரும்பிப் போனான் என்பதை நாம் கவனிப்பது அவசியம்.

இங்கே, உற்றுக் கவனித்தால் உலக மக்களின் மதிப்பீடு முழுத் தவறு என்பது நிச்சயமாய் விளங்கும். பொன்னும், பொருளும், பணமும் பதவியும் ஒரு மனிதனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்க முடியும் என்று உலகம் பலமாய் நம்புகிறது. ஆனால், இந்த மந்திரிக்கோ, பணத்திற்கும், இன்னபிற சௌகரியங்களுக்கும் குறைவேயிருந்திருக்க நியாயமில்லை. இருப்பினும் அவைகள் யாவும் அவனுக்குப் போதுமான சந்தோ ஷத்தைக் கொடுக்கவில்லை. பாவம் என்ற பாரம் அவனை அழுத்திக் கொண்டிருந்தது. தேவனாலே மாத்திரம் இட்டு நிரப்பக் கூடிய ஒரு இடம் காலியாகவே இருந்தது.

தன்னுடைய மத காரியங்களை நிறைவேற்ற அவன் மேற்கொண்ட நெடும் பயணமும் அவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. ஆனால், சுவிசேஷகனாகிய பிலிப்புவின் மூலம் பெற்றுக் கொண்ட"ஞானஸ் நானமோ'' அவனுடைய எல்லாப் பாவங்களையும் கழுவி, அவனை மெய்யான சந்தோஷத்திற்குள் வழி நடத்தினது. உலகம் தரக் கூடாத, தர முடியாத சந்தோஷத்தை அவன் பெற்றுக் கொண்டான்.

மந்திரியின் மனமாற்றத்தை வாசிக்கும் என் அன்பிற்குரிய வாசகரே! நான் நேசிக்கும் நண்பரே! மெய்யான சந்தோஷத்தை உங்கள் வாழ்க்கையில் பெற்று அனுபவித்துக் கொண்டுள்ளீர்களா?

அல்லது பணத்தின் மூலமும், பட்டத்தின் மூலமும், பதவியின் மூலம் சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்பி வீணாக நாட்களைக் கழித்துக் கொண்டுள்ளீர்களா?

எத்தியோப்பிய மந்திரி வாழ்ந்தது முதல் நூற்றாண்டுக் காலம். நாம் வாழ்வது 20-ம் நூற்றாண்டின் இறுதியாண்டுகள். மந்திரிக்கு கிறிஸ்துவின் வருகை சமீபித்திருந்ததைக் காட்டிலும், நமக்கு இன்னும் சமீபமாக உள்ளது. நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள மனமாற்ற சம்பவங்கள். ஏதோ படித்துத் தெரிந்து கொள்வதற்காக மட்டுமல்ல. நாம், நம்முடைய நிலையில் தெளிவடைந்து பயன்பெறவே தேவனால் எழுதப்பட்டுள்ளதென்பது நினைவில் இருக்கட்டும்.

இதை வாசிக்கும் சிலாக்கியம் பெற்ற அநேகராகிய நாம் ஒருவேளை பக்தியுள்ள பாவிகளாக இருக்கலாம். பக்தியை ஆசையோடு அரவணைக்கும் நம் தேவன், பாவத்தை அறவே அருவருக்கிறார். அன்று பக்தியுள்ள பாவியாக இருந்த மந்திரியை தேவன் சுவிசேஷகனாகிய பிலிப்புவைக் கொண்டு சந்தித்தார். ஆனால், இன்று வேத வசனங்களைக் கொண்டும், வசனங்களை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள வார்த்தைகளைக் கொண்டும் உங்களைச் சந்திக்கிறார். அன்று பக்தியுள்ள பாவியாகிய மந்திரி மனம் மாறி, கீழ்ப்படிந்து, ஞானஸ்நானத்தின் மூலம் தன் பாவங்கள் கழுவப்பட்டு சந்தோஷமாய் வீடு திரும்பினான்.

நீங்கள் எப்படி? வழக்கம் போல் சால் ஜாப்புகளைத் தான் அடுக்கப் போகிறோமா? அநேகராகிய நாம் ஜென்மீகக் காரியங்களில் அதிக நாட்டம் செலுத்தி, ஆன்மீகக் காரியங்களில் கோட்டை விட்டுக் கொண்டுள்ளோம் என்பதை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துகிறேன். குறிப்பாக சபைக் கட்டுப்பாடும் பாரம்பரியமும் நம்முடைய மெய்யான சந்தோஷத்திற்கு பெருந்தடையாய் இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இருக்கிற தடைகளைத் தகர்த்தெறியுங்கள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் மந்திரியின் மாதிரியைப் பின்பற்றுங்கள். மெய்யான சந்தோஷத்தை மாத்திரமல்ல, பரலோக பாக்கியத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

E.Z.S. ராஜநாயகம்

# தேவன் இன்று மனிதனுடன் எவ்வாறு பேசுகிறார்?

எழுதப்பட்டுள்ள வசனத்திற்கு மாறாகவும், அப்பாலும் தனிப்பட்ட மனிதனிடம் இன்று தேவன் நேரிடையாகப் பேசுவதாக அநேக மக்கள் நம்புகின்றனர். தேவன் என்னுடன் பேசி, இதை இதைச் செய்யச் சொன்னார் என்றே, அல்லது இந்தந்த காரியங்கள் நடக்கும் என கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார் என்றே பொதுவாக அவர்கள் கூறுகின்றனர். இந்த மாதிரியான வழிகளில் தேவன் என்னிடம் பேசுகிறதில்லை; உங்களிடம் இப்படி தேவன் பேசுகிறாரா? சிலரிடம் அவர் நேரிடையாகப் பேசி சில சத்தியங்களை வெளிப்படுத்தும்போது, மற்றவர்களிடம் அவர் அவ்வாறு பேசுவதில்லை என்றால் அது தேவனை பாரபட்சமுள்ளவராக்காதா? இந்த மாதிரியான காரியத்திற்குள் நாம் அதிகமாகச் செல்லு முன், வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை நாம் பார்க்கலாம்.

வித்தியாசமான காலங்களில், தேவன் வித்தியாசமான வழிகளில் பேசியிருக்கிறார் என்பது உண்மையே. ஆதியில் பிதாக்களிடம் அல்லது குடும்பத் தலைவர்களிடம் அவர் நேரிடையாகப் பேசினார். பின்னர், தேவன் கூறியவற்றை தங்கள் குடும்பங்களுக்கு அவர்கள் சொன்னார்கள். அதன்பின், தீர்க்கதரிசிகளின் மூலமாக தேவன் பேசினதை அவர்கள் மக்களுக்குத் தெரிவித்தனர். இறுதியாக, தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து வழியாக தேவன் பேசினார். இவை அனைத்தையும் மனதில் வைத்துக் கொண்டு தான் எபிரேய எழுத்தர் கூறினார் : "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்." (எபி. 1 : 1, 2).

பேதுரு அறிவித்தார் : "நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின் பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேச குமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும்

பெற்ற போது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம், அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்த தீர்க்க தரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்''. (IIபேதுரு 1 : 16 – 21).

முதலாவதாக கர்த்தர் தங்களுக்கு முன்பாக மறுரூபமான காலத்தை பேதுரு குறிப்பிட்டார் என்பதையும், பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, ''...இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்...'' (மத். 17:5) என்று கூறியதையும் அவர்கள் கேட்டனர் என்பதையும் கவனியுங்கள். கிறிஸ்துவைப் பற்றி யோவான் எழுதும்போது, அவர் வார்த்தையாக இருந்தார் தேவனிடமிருந்து வார்த்தையை அளித்திட வந்தார் என்று எழுதினார். நாம் படிக்கிறோம் ''ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்'' (யோவான் 1 : 1, 2). பின்னர் அவர் கூறினார் : ''இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படி யாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.'' (யோவான் 20 : 30, 31).

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட பிரகாரம் ஆதிகால பரிசுத்த மனிதர்கள் பேசியதாக பேதுரு அறிவிக்கிறார். பவுல் நமக்குச் சொல்லுகிறார்: ''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவ னாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது''. (2 தீமோ. 3 : 16, 17). சுவிசேஷம் ஏவப்பட்டு எழுதப்பட்டதாகப் பவுல் குறிப்பிடும் போது, பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட மனிதர்களை ஏவி வசனத்தை எழுதச் செய்தார் என்பதை

அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். எழுதுவதற்கு அவர் அவர்களுக்கு உதவினார்; அல்லது வழி நடத்தினார். அது வாய்மொழியால் ஏவப்பட்டிருக்கிறது. அது மனிதனுடைய வார்த்தை அல்ல, ஆனால் தேவனுடைய வார்த்தை. எனவே, எந்த நற்கிரியையும் செய்ய மனிதனை அது தகுதியுள்ளவனாக்குகிறது. மனிதனுக்கு தாம் எதைச் சொல்ல வேண்டுமென்று தேவனுக்குத் தெரியும். அதைச் சொன்னார். பரிசுத்த ஆவியானவர் அதை எழுதும்படியாக ஏவினார் அல்லது வழி நடத்தினார். பேதுரு மேலும் எழுதும் போது, "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி". (II பேதுரு. 1 : 3) என்றார். ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ளதைக் கவனியுங்கள். அவர் அதை எப்படிச் செய்திருக்கிறார்? அவருடைய வசனத்தின் வழியாகச் செய்துள்ளார்.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டனர். பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களுக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொடுப்பதற்காக அவர்கள் மேல் கைகளை வைத்தனர். சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்தவும் இது நடந்தது. ஏனெனில், அந்த நேரம் வரை, புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்பட்டு மனிதன் கையில் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. பூரணமானது வரும் போது அற்புதங்கள் ஒழிந்து போகும் என பவுல் கூறும் போது புதிய ஏற்பாடு வருவதையே அவர் குறிப்பிடுகிறார். இறுதியில், வார்த்தை பூரணமாகக் கொடுக்கப்பட்டது. எனவே யாக்கோபு அறிவித்தார் : "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்". (யாக்கோபு 1 : 25). அவர் மேலும் கூறினார் : "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்". (யாத். 1: 22).

இந்த வார்த்தைகள் ஒரு போதும் ஒழிந்து போகாது என இயேசு கூறினார் : "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை". (மத்தேயு 24 : 35). பின்னர் பேதுரு சொன்னார் : "கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே". (1 பேதுரு 1: 25). யோவான் எழுதினார். "இந்தப் புத்தகத்தி

லுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் காட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்''. (வெளி. 22 : 18, 19).

பவுல் போதித்த நற்செய்தியைப் பற்றி அவர் கூறினார் : "உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன். முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல், வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்.'' (கலாத்தியர் 1 : 6 - 9).

மேற்சொன்ன சகல வசனங்களிலிருந்தும், சுவிசேஷம் தேவனிடமிருந்து வந்தது என்றும், பூரணமாக எழுதப்பட்டு அவை மனிதனுக்குத் தரப்பட்டுள்ளது என்றும், அவை மட்டுமே நமது ஆன்மீக வாழ்க்கைக்குப் பாதுகாப்பாக உள்ளன என்றும் தெரிகிறது. பவுல் நமக்குச் சொல்லுகிறார் : "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.'' (ரோமர் 10 : 17). அவர் குறிப்பிடும் தேவனுடைய வார்த்தை எது? புதிய ஏற்பாட்டில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கும், தேவனுடைய எழுதப்பட்ட வசனங்கள் மட்டுமே.

இன்று புதிய வெளிப்படுத்துதல்களை தேவன் தருகிறாரா? நம்மில் பலருக்குச் சொல்லாத சில காரியங்களை வித்தியாசப்பட்ட சிலரிடம் அவர் இன்று சொல்லிக் கொண்டிருக்கிறாரா? நிச்சயமாக கிடையாது. தேவனுடைய சகல வெளிப்படுத்துதல்களும் நம்மிடம் இன்று இல்லாமல், அவர் மேற்கொண்டு தமது விருப்பத்தை சில மனிதர்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பாரேயானால், வேதாகமத்தின்

பயன் என்ன? அவர் இன்னும் மனிதனிடம் வெளிப்படுத்திக் கொண்டி ருந்தால், நாம் என்ன செய்ய வேண்டுமென அவர் விரும்புகிறார் என்பதை அறிய நமக்கு ஒரு வழியும் இல்லாமல் போய்விடும். மேலும், ஒருவனிடம் ஒன்றைச் செய்யச் சொல்லுவதும், மற்றொருவனிடம், அதற்கு முரணான வேறு ஒன்றைச் செய்யச் சொல்லுவதும் அவர்களுக்குக் குழப்பமான காரியமாகாதா? எனது நண்பர்களே, அவருடைய வார்த்தையைத் தவிர்த்து அதற்குக் கூடுதலாக இன்று தேவன் யாரிடமும் பேசவில்லை என்பதை நமக்கு இது உறுதிப்படுத்து கிறது. ஆனால் அற்புதங்கள், அந்நிய பாஷை சம்பந்தமாக, தேவன் தங்களிடம் நேரிடையாகப் பேசுகிறார் என உரிமை கொண்டாடும் மக்கள் ஒருவருக்கொருவர் முரண்பாடாக பேசுகின்றனர் என்பதைக் கவனியுங்கள். தேவனுக்கு விரோதமானவர்கள் என ஒருவருக்கொ ருவர் குற்றஞ் சாட்டுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதன் உண்டாக்கிய, மனிதப் பெயர்களைத் தாங்கிய, வித்தியாசப்பட்ட சபைகளிலே அவர்கள் அங்கம் வகிக்கின்றனர். தேவன் அனுமதிக்காத வழிகளில் ஆராதனை செய்து வருகின்றனர். தேவன் உண்மை யிலேயே இவர்களிடம் பேசிக் கொண்டிருந்தால் இம்மாதிரியான காரியங்களைச் செய்ய அவர் கூறமாட்டார்.

எனது நண்பர்களே! ஏமாறாதீர்கள். தேவனுடைய விருப்பத்தை நீங்கள் அறிய விரும்பினால், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை யாகிய புதிய ஏற்பாட்டுக்குத் திரும்புங்கள். இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்பதையும், நீங்கள் எந்த சபையில் இருக்க கர்த்தர் விரும்புகிறார் என்பதையும், அவரை நீங்கள் ஆராதிக்கும் வழியையும், எப்படி வாழ வேண்டுமென்பதையும் அதில் நீங்கள் கற்றுக் கொள்ள முடியும். கர்த்தர் ஏற்கனவே பேசியிருக்கிறார். நண்பர்களே, அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தினவற்றை நாம் கேட்டு நடப்பது மட்டுமே நமக்குப் போதுமான இருக்கிறது.

J.C. சோட்

**யோவான் 17:17**

**உம்முடைய வசனத்தினாலே அவர்களை பரிசுத்த மாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்**

## திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை திங்களிதழ் விதிப்படிவம்

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 195, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701. |
| அச்சிடுவோரும் பெயரும் முகவரியும் | : | **ஜீவசக்தி பிரஸ்** 148 கிருஷ்ணம் பாளையம், ஈரோடு – 638 003. |
| வெளியிடுவோர் பெயர் | : | **கிறிஸ்துவின் சபை,** காங்கயம். |
| இந்திய குடிமக்களா | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701. |
| ஆசிரியர் பெயர் | : | **S. ராஜநாயகம்** |
| இந்திய குடிமக்களா | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701. |
| இதழுக்குரியவர் பெயரும், முகவரியும் | : | **கிறிஸ்துவின் சபை,** தாராபுரம் ரோடு, காங்கயம் 638 701. |
| இந்திய குடிமக்களா | : | ஆம் |
| முகவரி | : | 195, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701. |

ராஜநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

காங்கயம்
மார்ச், 1996.

(ஒப்பம்)
**S. ராஜநாயகம்**

## பெண்கள் பகுதி

# மரணம் என்றால் என்ன? உயிர்த்தெழுதல் என்றால் என்ன?

"ஆவியில்லாத சரீரம் செத்தாயிருக்கும். . ." (யாக்கோபு 2:26) "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரேயர் 9:27). "ஆகிலும் மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை விதையாமல் கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்..."

"மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும் அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும் கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும் பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்."

சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுருபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். (I கொரிந்தியர் 15:35-38; 42-44; 50-54).

ஒரு சமயம், அந்தோணி வீட்டின் வாயிலருகே நின்று வீதியில் வந்த சவ ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மேரி, அருகே வந்து, அவள் தோளில் கைபோட்டபடியே நின்று மரணமே ஒரு மனிதனுக்கு இறுதியானதாகத் தெரிகிறது, அப்படித்தானே? அந்தோணி என்றாள். மரணத்தைக் குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்று அறிந்த கிறிஸ்தவர்களுக்குக் கூட, எல்லாவற்றைக் காட்டிலும் மரணம் மிக மோசமானதாகவே தெரிகிறது.

நான் சொல்வது சரிதானே, அம்மா என்றான். அவளோ, இல்லை என்று பதிலளித்துவிட்டு சில வியாதிகள் இதை விடக் கொடுமையானது என்றான். ஏன், விவாகரத்து கூட இதைவிட மோசமானதே என்றாள். ஏன், உன் நண்பன், சுந்தரின் நிலையை கொஞ்சம் நினைத்துப்பார். அவனுடைய தகப்பன், அவனை யும், அவனுடைய தாய் மற்றும் சகோதரிகளை போதுமான அளவு நேசிக்காததால் எவ்வளவாய் வேதனைப்படுகிறான். மரணம் வாழ்க்கையை அழித்து சேதப்படுத்தினாலும், நல்ல நினைவுகளையாகிலும் விட்டுச் செல்கிறது. ஆனால், கோபம், சண்டை, பொறாமை, மண முறிவு ஆகியவை வாழ்வையும் அழித்து, நல்ல நினைவுகளையும் சேதப்படுத்திவிடுகிறது.

"ஒரு மனிதன் மரிக்கும் பொழுது என்ன நிகழ்கிறது, அம்மா?" இது அந்தோணியின் கேள்வி.

"மனிதனுக்கு, ஜீவனைக் கொடுக்கும் ஆவி, மரணத்தின் போது சரீரத்தை விட்டுப் போய் விடுகிறது என வேதாகமம் கூறுகிறது. ஆவியில்லாத சரீரம் செத்ததாக இருக்கிறது. ஏதேன் தோட்டத்திலே, ஆதாமுக்கும், ஏவாளுக்கும் என்ன சொன்னார் என்பது நினைவிலிருக்கிறதா? என்னுடைய வார்த்தைக்கு செவிகொடாவிட்டால், நீங்கள் சாவீர்கள் என எச்சரித்தார்."

"ஆனால் சாத்தானோ, நீங்கள் சாகவே சாவதில்லை என்று அவர்களிடம் பொய் சொன்னான் ஆனால், அவர்கள் உண்மையில் மரிக்கவில்லை" தானே என்றான் அந்தோணி அம்மாவிடம்.

இல்லை, அவர்கள் மரித்தார்கள் ஆவிக்குரிய மரணத்தை அடைந்தார்கள் என்று அங்கே அவன் தாய் அவனுக்கு பதிலுரைக்கிறாள். முதன் முறையாக அவர்கள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுகிறார்கள். அந்த நாளிலிருந்து தொடர்ந்து மக்களை பாவமானது தேவனிடத்திலிருந்து பிரித்துக் கொண்டேயுள்ளது. ஆவிக்குரிய மரணம் என்பது

மிகவும் பயங்கரமானது. ஏனெனில் அது நித்திய நித்தியமாக ஒரு நம்பிக்கை இல்லாத நிலைக்கு நம்மை கொண்டு போய் விடுகிறது. அந்த வகையான மரணத்திலிருந்து தம்மை இரட்சித்துக் கொள்ள தாமாக எதுவுமே செய்ய இயலாது. பயங்கரமான இந்த குழியிலிருந்து நம்மை மீட்க தேவன் இரக்கங்கொண்டார். தேவனுக்கும், மனுக்குலத்துக்கும் இடையே நின்ற பிரிவினையாகிய சுவரை தகர்த்துப் போட தன்னுடைய ஒரே மைந்தனாகிய இயேசு ரட்சகரை இப்பூமிக்கு அனுப்பினார்.

அதே சமயம் ஆதாமும், ஏவாளும் வயது சென்றவர்களாகி அவர்கள் சரீரத்தினுடைய அணுக்களும், உருப்புக்களும் முதிர்ந்ததினால் சரீரப் பிரகாரமான மரணத்தை அடைந்தார்கள். அவர்கள் மரித்தார்கள். அவர்கள் வழியிலே வந்தவர்களும் மரித்தார்கள் மானிடராய் பிறந்த எவரும் மரணத்துக்கு தப்ப முடியாது. அது கட்டாயமான ஒன்று.

சரி, நாம் மரிக்கும் போது என்ன நடக்கும்? என்று அந்தோனி தன் அம்மாவிடம் கேட்கிறான். பிரசங்கி 12:7-ல் ஞானி சாலமோன் குறிப்பிடும்போது "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்கு திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது" என்று கூறுகிறார். சிலர், மரித்தவர்களின் ஆவி வீடுகள், இடங்கள், மனிதர்கள் இவைகளினூடே அலைந்து திரிகிறதென்று நம்புகிறார்கள். இவைகள் எல்லாம் நிஜந்தானா? என்று மீண்டும் ஒ்ரு கேள்வியை போடுகிறான் அந்தோணி.

ஒரு மனிதன் மரிக்கும்போது அவனுடைய ஆவி தேவனிடத்திற்கு திரும்பி விடுகிறது என்று வசனத்தில் நாம் வாசிக்கிறோம். அவைகள் பூமியில் அலைந்து திரிவதில்லை. லுக்கா 16-ம் அதிகாரத்தை நாம் வாசித்தால் அங்கே இயேசு கிறிஸ்து இரண்டு மனிதர்களுடைய மரணத்தைப் பற்றி கூறுகிறார். ஒருவன் நீதிமானாயிருந்தான். மற்றவன் தேவனை மறந்தவனாய் இருந்தான். பின்பு அந்தத் தரித்திரன் தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். லாசருவும் மரித்தான் ஐசுவரியவானும் மரித்தான். ஆனால் லாசரு பரதீசுக்குச் சென்றான். தன்னலம் கொண்ட செல்வந்தனோ பாதாளத்திற்குச் சென்றான். அவர்களின் ஆவி இந்த பூமியில்

இருந்து சுற்றி அலைந்து திரிந்து கொண்டிருக்கவில்லை. மாறாக அவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து கடந்து செல்லவும் இயலாதவர்களாயிருந்தார்கள். "இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து போகவும் அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூட்டாதபடிக்கு எங்களுக்கும், உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது" என்று ஆபிரகாம் சொன்னதாக நாம் வேதத்திலே வாசிக்கிறோம்.

மரித்த பின் என்ன நிகழ்கிறது என்பதற்கு விடை கண்ட அந்தோணி அத்தோடு இராமல் உயிர்த்தெழுதல் என்றால் என்ன? என்று கேட்கிறான்.

இயேசுவின் நண்பனாகிய லாசரு மரித்த போது, இயேசு மார்த்தாளிடம், "நானே, உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றார் (யோ. 11:25). ரோமர் 6:5-ல், 'அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்', என கிறிஸ்தவர்களுக்கு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு சிலுவையிலறையப்பட்ட பின்பு, மூன்று நாள் கல்லறையில் இருந்தார். அவரை விட்டுப் பிரிந்த ஆவி, பரதீசிலிருந்து மீண்டும் திரும்ப வந்து, அவருடைய சரீரத்துக்குள் புகுந்து உயிரடையச் செய்தது. ஒரு வேறுபாடு என்னவெனில் : அவர் மீண்டும் மரிப்பதில்லை. அவருடைய சரீரம் மாற்றப்பட்டு, பூட்டப்பட்டிருந்த அறை வீட்டுக்குள் பிரவேசித்தார். அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள். அவரோ அவர்களை விட்டுக் கடந்து போனார். (யோவா. 20:19-31, லூக் 24:31) கல்லறையிலிருந்து வெளிவந்த அதே சரீரம், ஏதோ ஒரு வகையில் மாற்றம் அடைந்து, மறுபடியும் மரிக்காத நிலையை பெற்றுக் கொண்டுள்ளது என்பதை நாம் அறியலாம். ஏனெனில், சந்தேகப்பட்ட தோமாவிடம், நீ பார்ப்பது கர்த்தராகிய நான்தான் என்பதை அறிந்து கொள்ள. "நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார். உன் கையை நீட்டி என் விலாவிலே போடு. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்" (யோவா 20:27)

பிலிப்பியர் 3:21-ல் "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்று தேவன் வாக்குக் கொடுத்துள்ளார். அதையே அப்போஸ்தலன் யோவான் கூறும் போது, "பிரியமானவர்களே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி

எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." என்கிறார்.

இவ்வளவையும் விளக்கமாகக் கூறிவிட்டு, மேரி அந்தோனியிடம் வேதாகமத்தை எடுத்து I தெசலோனிக்கேயர் 4:13-18 வரையுள்ள வசனப் பகுதிகளை வாசிக்கும்படி கேட்கிறாள்.

"அன்றியும் சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலதுக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்த பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே, அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும், தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார்.

கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார் அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில், எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்."

வெளிப்படுத்தல் 20:12-15 வசனப் பகுதியில் "மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள் சமுத்திரமும் தன்னிலுள்ள மரித் தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.

ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.'' 22-ம் அதிகாரம் 12-ம் வசனம், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது'' என்று இயேசு கூறுகிறார்.

ஆகையால் மரணம் எவ்வாறு உறுதியாய் நேரிடுகிறதோ அதேபோல் உயிர்த்தெழுதலும் நடைபெறும். எனவே நாம் ஒவ்வொருவரும் தேவன் விரும்பும் வாழ்க்கையை வாழ வேண்டும் என்பது மிகவும் முக்கியமாக இருக்கிறது. அதன் மூலம் நாம் அவரோடே கூட நித்தியகாலமாக ஒன்றாக வாழ முடியும். மரணம் எவ்வாறு நிச்சயமோ அவ்வாறே உயிர்த்தெழுதலும் நிச்சயம்.

இதை வாசிக்கும் அருமை பெற்றோரே, பிள்ளைகளே! மேரி தன் அன்பு மகன் அந்தோனியிடம் உரையாடின பகுதியை வாசித்தோம். தேவனுடைய வார்த்தைகளை எவ்வளவு தெளிவாக தன் மக்களுக்கு எடுத்துரைக்கிறாள்! வளரும் இளம் குழந்தையான அந்தோனி வியக்க வைக்கும் வினாக்களை தன் தாயிடம் கேட்டு தன் சந்தேகத்தைப் போக்கிக் கொள்கிறான். நம் பிள்ளைகளின் நிலை என்ன? நம்முடைய குடும்பங்களில் பெற்றோர், பிள்ளைகள் உரையாடல் எத்தகையதாய் உள்ளது?

இன்றைய நாகரிக நாட்களில் குடும்பமாக தொலைக்காட்சி பெட்டி முன் அமர்ந்து மோசமான நிகழ்ச்சிகளை காணும் குடும்பங்கள் எத்தனை? புத்தியில்லாத ஸ்திரியைப் போல் நம் சொந்தக் கைகளினாலேயே நம் குடும்பத்தை அழித்துப் போட வேண்டாம்.

தாய்மார்களே! பிள்ளைகளுக்கு வேதத்தில் புதைந்து கிடக்கும் பொக்கிஷயங்களை தேடிக் காட்டுவோம் தன் தாய் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த சிறுவன் அந்தோனி தன் கண்களில் நீர் மல்க, "அம்மா! நான் இனி மேல் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ்வேன்'' என்று உறுதி கொடுக்கிறான். ஆம் நாமும் கூட நம் பிள்ளைகளின் பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட பிரயாசை எடுப்போம். அப்படிச் செய்வதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உதவி செய்வாராக! ஆமென்.

**Betty Choate**

**Racheal Nayagam**

## புதிய ஏற்பாட்டு ஆராதனை (9)

# ஜெபம்

புதிய ஏற்பாட்டு ஆராதனையின் மற்றொரு அம்சம் ஜெபமாகும். ஆதிக் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கக் கூடிவரும்போது, அவர்களின் ஆராதனையில் ஜெபம் முக்கிய பங்கு பெற்றிருந்தது. சபை நிறுவப்பட்டிருந்த வேளையில், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2:42) என பதிவேடு கூறுகிறது. "ஜெபத்திலும்" என குறிப்பிடுவதின் மூலம் ஆராதனையின் இப்பகுதிக்குத் தரப்பட்ட முக்கியத்துவத்தைக் கவனியுங்கள்.

ஜெபம் என்ற வார்த்தைக்கு பரிந்து பேசுதல், தியானம் செய்தல், விண்ணப்பித்தல், அல்லது கர்த்தரோடு பேசுதல் என்று பொருள். ஜெபம் நமது ஆராதனையின் ஒரு பாகமாக இருப்பது மட்டுமல்லாமல், நமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியுமாகும். பவுல் எழுதுகிறார் : "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவர்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்." (எபேசியர் 6:18). மீண்டுமாக, "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று அவர் கூறுகிறார். (1 தெச. 5:17). ஜெப வாஞ்சையுடன் ஒருவர் எப்போதும் ஆவியில் நிறைந்திருக்க வேண்டும் என்பதுதான் இதற்கு அர்த்தம்.

இந்த அதிகமுக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைப்பற்றி நாம் கவனிக்கும்போது, சில முக்கிய குறிப்புகளை இங்கு காண்போம் :

### 1. கிறிஸ்தவர்கள் அல்லது தேவனுடைய பிள்ளைகளுக்காக முக்கியமாக ஜெபம் ஒதுக்கப்பட்டுள்ளது :

கிறிஸ்தவன் அல்லாத ஒருவன் ஜெபம் செய்ய இயலாது என்றோ, அல்லது ஜெபம் செய்யக்கூடாது என்றோ அதற்கு அர்த்தம் அல்ல. ஆனால் ஜெபம் கிறிஸ்தவனுக்குச் சொந்தமான ஒரு சலுகையும் ஆசீர்வாதமும் ஆகும் என சுவிசேஷம் தெளிவாகக் கூறுகிறது. "பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லை என்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்" (யோவான் 9:31) என நாம் படிக்கிறோம். ஒருவன் தேவனை தொழுது கொள்ளுபவனாகவும், கர்த்தரின் விருப்பத்தின்படி நடப்பவனாகவும் இருந்தால் மட்டுமே

கர்த்தர் ஒருவனுடைய ஜெபத்தைக் கேட்கிறார் என்னும் நிபந்தனை களைப் பாருங்கள். யாரைப்பற்றிக் கூறுகிறார்? சந்தேகமின்றி ஒரு கிறிஸ்தவனைப்பற்றித்தான். மேலுமாக, ஒரு பாவி எதற்காக ஜெபம் செய்யக்கூடும்? தனது பாவங்களைக் கர்த்தர் மன்னிக்க வேண்டும் என்று ஒரு பாவி ஜெபிக்க இயலாது. ஏனென்றால், ஒருவன் விசுவா சித்து, இரட்சிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டுமென்று கிறிஸ்து கூறினார். (மாற்கு 16:16). விசுவாசத்தை அடைய அவன் ஜெபம் செய்ய முடியாது, ஏனெனில் விசுவாசத்தை உண்டாக்க சுவிசேஷம் தரப்பட்டுள்ளது. (யோவான் 20:20, 31; ரோமர் 10:17). அல்லது பாவியாக இருந்துகொண்டே வேறு எந்தக் காரியத்திற்காகவும் அவன் ஜெபிக்க இயலாது.

புதிய ஏற்பாட்டுப் பக்கங்களில் காணப்படும் ஜெபங்களைப் பற்றிய பல சுவிசேஷப் பகுதிகளையும் நாம் படிக்கும்போது, அவை அனைத்துமே கிறிஸ்தவனுக்காகச் சொல்லப்பட்டிருக்கிறதை நாம் காணமுடியும். கீழ்படிதலின் விளைவாக ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய பிள்ளையாகிறான். (கலா. 3:26,27). எனவே, உரிமையுடன் தேவனை அப்பா, பிதாவே என அவன் அழைக்கக்கூடும். (ரோமர் 8:15). பாவியும் பரிசுத்தவானும் ஜெபத்தின் வழியாக பிதாவை அடையக்கூடு மென்றால், பாவியை விட கிறிஸ்தவனுக்கு என்ன சலுகை இருக்கக் கூடும்? எனவே, கிறிஸ்தவனுக்கு ஜெபம் என்னும் தனிப்பட்ட சலுகையிருப்பதை நிச்சயமாக நீ காண முடியும். இதுவே ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதால் கிடைக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாகும். (எபே. 1:3)

தனது பாவங்களுக்கு மன்னிப்பு பெறுவதற்காக ஒரு பாவி ஜெபம் செய்து அதன் மூலமாக கிறிஸ்தவனாகிறான் என்ற பரவலான இன்று உள்ளது. என்ற போதிலும், இது முற்றிலுமாக மனிதனுடைய உபதேசமே தவிர, தேவனுடைய வசன ஆதாரம் எதுவும் இதற்குக் கிடையாது.

## 2. நமது ஜெபங்கள் இயேசு கிறிஸ்துவின் வழியாக தேவனுக்கு ஏறெடுக்கப்பட வேண்டும்

தேவன் பிதாவாக இருக்கிறார் : சகல ஆசீர்வாதங்களையும் அளிப் பவராக அவர் இருக்கிறார். நமக்கு உதவி தேவைப்படும் சமயங்களில் அவரை அணுகவும், நமக்கு அவர் ஏற்கனவே அளித்துள்ள ஆசீர்வா தங்களுக்காக அவருக்கு நன்றி சொல்லவும் வேண்டியது சரியான செயலே. என்றாலும், நமக்கும் தேவனுக்கும் இடையே பாவம் குறுக்கிடு வதால் நாம் தேவனிடத்தில் நேரே செல்ல இயலாது. ஆகவே நமக் காகப் பரிந்து பேச ஒரு மனிதனை (வாழ்வில் அவன் நிலை ஏதுவாக இருப்பினும்) நாம் எதிர்பார்க்கத் தேவையில்லை. மாறாக, இயேசுவே நமது மத்தியஸ்தரும், நமக்காகப் பரிந்து பேசுபவரும், ஒருமைப்படுத்துப

வருமாக இருக்கிறபடியால், கிருபையின் சிங்காசனத்தை இயேசு வழியாகவே நாம் அணுக வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு நாம் செவிகொடுப்போம் : "என் பிள்ளைகளே நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்: ஒருவன் பாவஞ் செய்வானாகில் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்." (1 யோவான் 2:1, 2). மீண்டுமாக, "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே..." (1 தீமோ. 2:5, 6). எனவே, நாம் எப்போதுமே இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அல்லது அவருடைய அதிகாரத்தைக் கொண்டு ஜெபம் செய்ய வேண்டும். (மத். 28:18).

## 3. ஆவியோடும் உண்மையோடும் நாம் ஜெபிக்க வேண்டும் :

தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழ வேண்டும் என கர்த்தர் கூறியிருப்பதை, நாம் முந்தைய பாடங்களில் கவனித்தோம். (யோவான் 4:24). ஆராதனையிலும், அன்றாட கிறிஸ்தவ வாழ்விலும் ஜெபம் ஒரு பகுதியாக இருப்பதால், நமது ஜெபங்கள் ஆவியோடும் உண்மையோடும் இருக்க வேண்டும். பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது, "என்னத்தினாலெனில், நாம் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமே யன்றி, என் கருத்து பயனற்றதாக இருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன்; கருத்தோடும் பாடுவேன்" என்றார். (1 கொரி. 14:14, 15). அதாவது, நமது ஜெபங்கள் கருத்தோடு செய்யப்படவேண்டும், நாம் சொல்லிக்கொண்டிருப்பவற்றில் நமது மனங்கள் ஒன்றித்திருக்க வேண்டும்; அவற்றில் தாழ்ச்சியோடும் உண்மையோடும் இருத்தல் அவசியம். மேலுமாக, நமது ஜெபங்கள் சுவிசேஷத்திற்கு இணக்கமாக இருக்க வேண்டும். அதாவது, கர்த்தருடைய விருப்பத்திற்கு மாறான காரியங்களைச் செய்ய அவரிடம் கேடக் கூடாது. ஒரு சமயத்தில் கிறிஸ்துவின் சீடர்களில் சிலர் மூடத்தனமான ஒரு வேண்டுகோளை விடுத்தபோது, "இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார்..." (மத். 20:22). மீண்டுமாக, இயேசு

கூறினார் : "...உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்." (மத். 4:7).

"கர்த்தரின் ஜெபம்" என்றழைக்கப்படுவதை நாம் உபயோகிக்கக் கூடாது என்பதற்கு இது ஒரு காரணமாகும். (மத். 6:9-13). அரசு வருக என்று ஜெபிப்பது கர்த்தருடைய விருப்பத்திற்கு இசைந்ததல்ல; ஏனெனில் அவருடைய அரசு ஏற்கனவே வந்து விட்டிருக்கிறது. (எபிரேயர். 12:28).

## 4. ஜெபம் செய்யும் முறைகள் சுவிசேஷத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:

நன்றி தெரிவிக்கும் ஜெபங்களை நாம் ஏறெடுத்தல் வேண்டும். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலிப். 4:6) உதவி தேவைப்படும் வேளைகளில் நாம் ஜெபிக்க வேண்டும். "அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்." (அப்போஸ்தலர். 12:5).

நாட்டுத் தலைவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். (ரோமர். 13). ஒருவருக்கொருவர் நலன்களுக்காக ஜெபிக்க வேண்டும். "நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக்கோபு 5:16)

வியாதிக்காரருக்காக நாம் ஜெபிக்க வேண்டும். "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்ப் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக் கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்." (யாக்கோபு 5:14, 15).

நாம் ஜெபிக்க கடமைப்பட்ட பல காரியங்களைப் பற்றியும் தனிப்பட்டவர்களைப் பற்றியும் கூறும் சுவிசேஷத்தின் அநேக வசனங்கள் நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். இதில் சபை பற்றிய காரியங்களும், நமது குடும்பங்களைப் பற்றிய விஷயங்களும், வீழ்ந்து போனவர்களைப் பற்றியும் இன்னும் பல காரியங்களும் அடங்கும்.

**5. ஜெபத்தைக் குறித்த சில எச்சரிக்கைகளையும் சுவிசேஷம் தருகிறது :**

"அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனிதர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்," (மத்தேயு 6:5-8) என்று கிறிஸ்து கூறுகிறார். மீண்டுமாக, "மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்," என அவர் எச்சரிக்கிறார். (மத்தேயு 6:14, 15).

எனவே, இறுதியாக, நமது ஆராதனையின் ஒரு பகுதியாகவோ அல்லது நமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகவோ ஜெபத்தை நாம் கருதிய போதிலும், அது முக்கியத்துவம் பெற்ற பெரிய காரியம் என நாம் அறியவேண்டும். ஆனாலும் கிறிஸ்தவர்களாகிய நாம் மேற்கண்ட இரு வகையிலும் தேவனோடு உறவாட தனிச்சலுகை பெற்றிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், கர்த்தரும் அதை எதிர்பார்க்கிறார். ஆராதனையைப் பொறுத்தவரையில் கிறிஸ்தவர்கள் கூடி வராமல், வீட்டில் உட்கார்ந்து கொண்டே எவ்வாறு காணிக்கை செலுத்தவோ அல்லது கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவோ முடியாதோ, அவ்வளவு வீட்டிலிருந்து கொண்டே ஜெபங்களை செய்வது ஆராதனையில் பங்கு பெறுவதாகாது. ஆராதனைக்காக கூடிவரும் கிறிஸ்தவர்கள் வீட்டில் ஜெபம் செய்வார்கள். ஆனால் ஆராதனைக்காகக் கூடி வராத மக்கள், வீட்டிலும் ஜெபம் செய்ய மாட்டார்கள். அவ்வாறே செய்தபோதிலும், கர்த்தருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கக் கற்றுக்கொள்ளும் வரை அதனால் பயன் எதுவுமில்லை.

விசுவாசத்தோடு ஜெபியுங்கள் - கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். ஜெபம் வல்லமை மிக்கது.

**J.C. சோட்**

# நீ ஏன் சந்தேகப்பட்டாய்

தாம் மரிக்கப் போவதையும், பின் அடக்கம் செய்யப்பட்டு, மூன்று நாட்களில் உயிர்க்கப் போவதையும் பல தடவைகள் தமது அப்போஸ்தலர்களுக்கு இயேசு சொல்லியிருந்தார். ஆனால், அவர்களுடைய கர்த்த ருக்கு இவ்வாறு சம்பவிக்கும் என அவர்களால் நம்ப முடியவில்லை. அல்லது இக்காரியங்களைப் பற்றி கர்த்தர் கூறியிருந்த யாவற்றையும் அவர்கள் புரிந்து கொள்ளவும் இல்லை. அதன் விளைவாக, கிறிஸ்து மரித்து, அடக்கம் செய்யப்பட்ட வேளையில் அவர்கள் எல்லாருமே செயலி ழந்து நொறுங்கிப் போனார்கள். செய்வதறியாது, திகிலடைந்து போயினர். அனைத்தையும் இழந்த அனாதை நிலையை அடைந்தனர். ஆனால், வாக்களித் தபடியே கர்த்தர் மீண்டும் உயிர்த்து வந்தார். பின் அவர்க ளுக்கு அவர் தோன்றிய பின், " பதினொரு சீடர்களும், கலிலேயாவிலே இயேசு தங்க ளுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு பணிந்து, கொண்டார்கள்; சிலரோ சந்தே கப்பட்டார்கள். அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி : வானத் திலும் பூமியிலும் சகல அதிகா ரமும் எனக்குக் கொடுக்கப்பட்டி ருக்கிறது, "(மத். 28:16-18) என்றார். "இயேசு வந்திருந்த பொழுது பன்னிருவரில் ஒருவ னாகிய திதிமு எனப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனே கூட இருக்கவில்லை. மற்ற சீடர்கள் கர்த்தரைக் காண்போம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன் : அவருடைய கைகளில் ஆணிகளினாலுண் டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலை விட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டலொழிய விசுவாசிக்க மாட்டேன் என் றான். மறுபடியும் எட்டு நா ளைக்குப் பின்பு அவருடைய சீடர்கள் வீட்டுக்குள்ளே இருந் தார்கள்; தோமாவும் அவர்களுட னேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப்பார் உன் கையை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசி யாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக : என் ஆண்டவரே! என் தேவ னே! என்றான் அதற்கு இயேசு : தோமாவே, நீ என்னைக் கண்ட

தினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிற வர்கள் பாக்கியவான்கள் என்றார்." (யோவான் 20:24-29) கர்த்தரை சந்தேகித்து எத்தனை முறை நாம் அவரைக் கைவிட்டு விடுகிறோம் நாம் எப்படி அவரை விசுவாசிக்க வேண்டு மோ அப்படி விசுவாசிப்ப தில்லை. அவர் கூறியபடி யெல்லாம் நிச்சயமாக நம்மை நடத்த மாட்டார் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், நாம் அங்கே தான் தவறுகிறோம். நமது வாழ்வில் காட்டக்கூடிய, பலத்த விசுவாசம், அதிகமான விசுவாசம், அசைக்க முடியாத விசுவாசம் நமக்குத் தேவை.

அப்போஸ்தலர் பேதுரு எழுதினார் : "பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன். பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரும்படி இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன். முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்ன வெனில் : கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின் படியே நடந்து, அவர் வருவார் என்று சொன்ன வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றிய ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயின என்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிர வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒரு வரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று

அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப் போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள். ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையிருந்தது, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக ஆமென்." (2 பேதுரு 3)

காணப்பட்ட வசனப்பகுதியின்படி, கடைசி நாட்களிலே (அப்போதிருந்தே கடைசி நாட்கள் நடந்து கொண்டிருக்கின்றன.) பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" எனக் கேட்பார்கள் என பேதுரு கூறினார். சகலமும் உண்டாக்கப்பட்ட காலம் முதல் இருந்த விதமாகவே இருக்கின்றனவே என்று காரணமும் காட்டுவர். இப்படியாக, கர்த்தர் திரும்பி வரப் போவதில்லை என்பதை சூசமாக உரைப்பர், என அவர் சொன்னார். எனவே, திரும்பி வருவேன் என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை அவர்கள் சந்தேசித்தனர். இப்படிப்பட்ட மக்கள் பல முக்கியமான

உண்மைகளை கவனிக்கத் தவறி விட்டனர் என பேதுரு தொடர்ந்து கூறுகிறார். முதலாவதாக, இந்த நேரம் வரை நாம் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் சகலவற்றையும் படைத்தவர் கர்த்தரே. இரண்டாவதாக, காலம் என்பது கர்த்தரைப் பொறுத்தவரை அர்த்தமற்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர் எப்போதுமே இருந்திருக்கிறார், தொடர்ந்து நித்தியத்திற்கும் இருப்பார் என்பதால் ஒரு சில ஆயிரம் ஆண்டுகள் அவருக்கு ஒரு பொருட்டல்லவே! உண்மைதான், காலம் மனிதனுக்கு மிகவும் முக்கியமானது. ஆனால் கர்த்தருக்கோ ஒரு நாள் ஆயிரம் ஆண்டுகள் போலவும், ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாளைப் போலவும் இருக்கக் கூடும். மூன்றாவதாக, "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தைத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9). வேறு விதமாக சொன்னால், கர்த்தர் வருவேன், என்று கூறியிருக்கிறார்; எனவே அவர் வருவார். சந்தேகமில்லை, அவர் வருகையை இதுவரை தாமதித்திருக்கிறார் என்றால், அதற்குக் காரணம் பலருக்கு இரட்சிப்படையும் சந்தர்ப்பம் கிடைப்பதற்காகத்தான் நான்காவதாக, திருடன் இரவில் வருவதைப் போல, அல்லது அறியாத வேளையில் கர்த்தருடைய நாள் வரும்; எனவேதான் எல்லாரும் எச்சரிக்கையுடன் அவருடைய வருகைக்காக தயாராக இருக்க வேண்டும். எல்லாரும் மிகவும் விசுவாசத்துடன் காத்திருக்கும் ஒரு குறிப்பிட்ட வேளையில் அவர் வர முடியாது. ஆகவே, எச்சரிக்கையுடன் எப்போதும் தயாராக இருக்க வேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியமாகிறது. தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருப்பதும் அவசியம். அவ்வாறில்லாமல் விசுவாசத்தில் வீழ்ந்து போகும் நேரமே ஒருவேளை கர்த்தர் திரும்பி வரும் நேரமாக இருக்கக்கூடும். இறுதியாக, இந்த சமயத்தில் நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், தற்போதைய ஆகாயத்தையும் பூமியையும் அழிக்க கர்த்தர் வருவார். அப்போது, தாங்க முடியாத அக்கினியிலே அவை வெந்து உருகிப்போகும் அதன் பின்னர், ஒரு முற்றிலும் புதிதான பூமியும் புதிதான ஆகாயமும் உருவாகும். நியாயவான்கள் அங்கே நிரந்தரமாக வாசஞ் செய்வர். எனவே பரியாசக்காரரும் சந்தேகப்பிராணிகளும் ஆத்திரப்படட்டும். என்றாலும் ஒருநாள் இவை அனைத்தும் நடக்கப் போவது உறுதி.

(தொடரும்)

## யெகோவா சாட்சிகள் (12)

### அவர்கள் தாங்களே உண்மையான சபை என வாதிடுகின்றனர்

நீங்கள் யெகோவா சாட்சிகாரர்களிடம் பேச நேரிட்டால், "சரி, எங்களுக்கு உண்மை கிறிஸ்தவனாக மாற என்ன செய்வது" என்று கேளுங்கள். இதை சொல்லக் காரணம், அவர்களே உண்மையான மார்க்கிகள் என்று வாதிடுவது தான்.

எனவே, நீங்கள் அவர்களை உங்களுக்குப் போதிக்கச் சொல்லும்போது நீங்கள் சீஷராக்கப்பட வேண்டும் என்பர். இதற்கு அவர்கள் யோவான் 13:35-ஐ காட்டுவர். இதில், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லோரும் அறிந்து கொள்வார்கள் என்றார்," என்று சொல்லப்படுகிறது.

எந்த மனிதனும் இயேசு சொன்ன இந்த உண்மையை அற்பமாக எண்ண இயலாது. ஆனால் சீஷனாவதற்கு இயேசு இதை மாத்திரம் சொல்லவில்லை. லூக். 14:26-33-ல், சீஷனுக்குரிய தகுதியாக அநேக காரியங்களை சொல்லுகிறார் வச. 26-ன் படி சீஷனாக விரும்புகிற ஒவ்வொருவரும், தன்னால் நேசிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் விட்டு விட்டு வரவேண்டும் என்பது கிறிஸ்துவின் எண்ணமல்ல மாறாக, கர்த்தரை வைக்க வேண்டிய ஸ்தானத்தில் அவர்களை எல்லாம் வைக்க வேண்டாம் என்பதே. (மத்தேயு. 10:37-40). மேலும் சொல்லும்போது "ஒரு உண்மை சீஷன் தன் குருவைப் போலாக வேண்டும் என்றும் சொன்னார். (லூக். 6:10) மத்தேயு 23:10-ல், கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு "குரு"வாயிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. யெகோவா சாட்சியினர் கிறிஸ்துவின் 'தெய்வீக குரு' தன்மையை மறுதலிப்பதால் அவர்களுடைய சீஷர்களாயிருக்க இயலாது.

மேலும் மத்தேயு 28:18-20-ல், இயேசு சொன்னார். "வானத்திலும், பூமியிலும், சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணுங்கள். இதே உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார். ஆமேன் இவ்வசனத்தில் பெரிய எழுத்துகளில்

உள்ள வார்த்தைகளான "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி" என்பதை தயவு செய்து கவனியுங்கள். வெறும் உபதேசம் ஒருவனை இயேசுவின் சீஷனாக்காது. அல்லது ஒரு மனிதனின் அன்பு மாத்திரம் ஒருவனை இயேசுவின் சீஷனாக்காது. அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு கீழ்படிபவன் மாத்திரமே அவருடைய சீஷனாகிறான். மத். 28:19 இயேசு சொன்னது போல், சீஷனாக்கப்பட்ட பின்பு. அவர்களுக்கு "ஞானஸ்நானங் கொடுக் கப்பட வேண்டும்." இயேசுவின் ஒவ்வொரு சீஷனும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, இயேசு கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ள வேண்டும். இந்த யெகோவா சாட்சியினர், இந்தக் கட்டளைகளை கீழ்ப டியவும் இல்லை இயேசு சொன்ன எல்லாவற்றையும் கை கொள்ளவு மில்லை. இப்படியிருக்க, அவர்கள் எப்படி இயேசுவின் உண்மை சீஷர்களாக இருக்க முடியும்? "அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்." (மத்தேயு. 23:3)

இரண்டாவதாக, அவர்கள் உண்மை கிறிஸ்தவர்களாக இருப்பின் மனிதனுக்கு வழிகாட்டியாயிருக்கிற தேவனுடைய வசனத்தை அவர்கள் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். வேதாகமம் தேவனுடைய வசனம் என்று அநேக நாமகரணக் கூட்டங்களும் போதிப்பதென்னவோ உண்மைதான். ஆனால் அதை (வசனத்தை) அவர்கள் மதிப்பதில்லை. வசனங்களுக்கு கீழ்படியுமளவுக்கு அவர்கள் அதை மதிப்பதில்லை. தங்களால் எழுதப்பட்ட புத்தகங்களுக்கப்பால், வேதாகமத்தின் போதனைகளை புரிந்துகொள்ள இயலாது என்று சொல்லி, வேதாக மத்தை கனவீனப்படுத்தகின்றனர். அவர்களின் உண்மையான பிரச்னை, வேதாகமத்தை மாத்திரம் கற்றுக் கொள்வதில் இல்லை. ஆனால் அவர்கள் வெளியிடுகின்ற பத்திரிக்கைகளையும், புத்தகங்க ளையும் கற்றுக் கொள்வதினால் தான் பிரச்னையே. அவர்கள் வேதாம கத்திற்கு மேல் தங்கள் புத்தகங்களை படிக்கும்படி உங்களை வற்புறுத்துவார்கள். ஆதலால் நீங்கள் உறுதியாய் நின்று, வேதாகமத்தை (மட்டும்) கற்று, அவர்கள் தங்கள் சொந்த புத்தகங்களில் எழுதுகின்ற மாறுபாடானவைகளின் வித்தியாசத்தைக் காண வேண்டும். தங்கள் புத்தகங்களை சார்ந்து, வேதாகமத்தை கனவீனப்படுத்தும் இவர்கள் எப்படி உண்மை கிறிஸ்தவர்களாக இருக்கக்கூடும்.

இன்னும் அநேக விஷயங்களிலும் யெகோவா சாட்சியினர் உண்மை கிறிஸ்தவர்களல்லர். அவற்றில் இன்னும் சிலவற்றைப் பின்ன தாகக் காண்போம்.

**E.A. ஆறுமுகம்**
**திண்டுக்கல்**

**(தொடரும்)**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, MARCH — 1996
MARCH THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701